17.02.2025

O.S.No.128/2018

பி.வா.சா.1.திரு. நயினான் வெள்ளைசாமி த.பெ.நயினான்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் பிரதிவாதியின் மகனும் அதிகாரம் பெற்ற முகவரும் ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. 14.06.2018 தேதியிட்ட பொது அதிகார ஆவணம் அசல் **(**அந்த ஆவணம் பி**.**வா**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** 26.10.1994 தேதியிட்ட உயில் ஆவணம் அசல் **(**அந்த ஆவணம் பி**.**வா**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** லெட்சுமணன் என்பவரது இறப்பு சான்றிதழ் நகல் **(**அந்த ஆவணம் பி**.**வா**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** அழகன் என்பவரது இறப்பு சான்றிதழ் **(**அந்த ஆவணம் பி**.**வா**.**சா**.**ஆ**.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** அசல் வழக்கு எண்.84/2019 வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **(**அந்த ஆவணம் பி**.**வா**.**சா**.**ஆ**.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** அசல் வழக்கு எண்.84/2019 வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் **(**அந்த ஆவணம் பி**.**வா**.**சா**.**ஆ**.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** 16.11.2005 தேதியில் இறந்துபோன அ.அழகன் என்பவரது வாதி சான்றிதழ் அசல் **(**அந்த ஆவணம் பி**.**வா**.**சா**.**ஆ**.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** 2020 – 2021, 2021 – 2022, 2023-2024 ஆண்டுகளுக்கான வீட்டு வரி ரசீதுகள் அசல் **(**அந்த ஆவணம் பி**.**வா**.**சா**.**ஆ**.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

**(**குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது**)**